# 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்

## செலவுத் தலைப்பு இல. 332

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01 – நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் பற்றிய சுருக்கம்

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

அத்தியாயம் 03 – ஆண்டுக்குரிய முழு நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டி

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) நிறைவேற்றிக்கொள்ளல் பற்றிய செயலாற்றுகை

அத்தியாயம் 06 – மனித வள தோற்றப்பாடு

அத்தியாயம் 07 - இணங்கியொழுகல் பற்றிய அறிக்கை

# 01 அத்தியாயம்

## நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் பற்றிய சுருக்கம்

### 1.1 அறிமுகம்

நீர் அடிப்படை மனித உரிமையாகும் என்பதோடு, குடி நீரை உரிய தர நியமத்துடன் கூடியவாறு போதியளவு பெற்றுக்கொள்வதில் சிரமத்தை அனுபவிக்கின்ற கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக சமூக மைய நீர் கருத்திட்டங்களை அமுலாக்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பல தசாப்தங்களாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, DANIDA, FINNIDA போன்ற சர்வதேச அமைப்புகளின் பூரண ஆதரவுடனும் நிதிப் பங்களிப்புடனும் இலங்கைக் குடியரசுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் நாடு முழுவதும் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு சமூகத்திற்குக் கையளிக்கப்பட்ட சமூக நீர்த் திட்டங்களின் எண்ணிக்கை 5000 ஐ நெருங்கிக் காணப்பட்டது.

ஆயினும், பல்வேறு பிரச்சனைகள் காரணமாக இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில், கிட்டத்தட்ட 500 சமுதாய குடிநீர் கருத்திட்டங்கள் 2010 ஆம் தசாப்தமளவில் செயலிழக்கும் ஆபத்துக்கு உள்ளாகியது. இதை நன்கு புரிந்து கொண்டு, அப்போதைய அரசாங்கம் அந்த நிலைமையைத் தடுத்து, சமூக நீர் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதை முன்னிட்டு தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தை தாபித்தது.

2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் அமுலாகின்றவாறு தாபிக்கப்பட்ட இத் திணைக்களத்தின் பிரதானமான குறிக்கோளாக காணப்பட்டது, மேற்படி சமூக நீர் வழங்கல் திட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்தி அவற்றின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதாகும்.

2014ஆம் ஆண்டின் இறுதியில் இத்திணைக்களம் நிறுவப்பட்ட போதிலும், திணைக்களத்திற்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்தல், பணியாளர்களை நியமித்தல், தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை நிறுவுதல் மிக மந்தகதியில் நடைபெறுதல் போன்ற காரணங்களாலும், பொதுத் திறைசேரியிலிருந்து இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு தொகையும் வருடாந்தம் ரூபா 100 மில்லியன் தொகைக்கும் குறைவாக இருந்தமையாலும் அதன் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரும் தடையாக இருந்தது.

2019 ஆம் ஆண்டளவில் இந்தச் சவால்களை வெற்றிகொண்டு, ஏற்கனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள் மற்றும் சமூக மைய அமைப்புகளின் ஒழுங்குமுறையாக்கலைத் தாண்டிச் சென்று, புதிய நீர் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு அதன் மூலம், கிராமப்புற சமூகத்தினருக்கான தனித்துவமான சேவையையும் கடமைப் பொறுப்பையும் நிறைவேற்றக்கூடியவாறு திணைக்களத்தின் கடமைப்பொறுப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டது. “பிரஜா ஜல அபிமானி” என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் பல புதிய கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் தொடர்ச்சியாக அந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

வருடாந்தம் ரூபா 100 மில்லியனுக்கும் குறைவான நிதி ஏற்பாட்டின் கீழ் 5 வருடங்களுக்கும் மேலாக மிகவும் மெதுவாக இயங்கி வந்த இத்திணைக்களம் மேலே குறிப்பிட்ட சவால்களை வெற்றிகொண்டதன் காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 1500 மில்லியனுக்கும் அதிகமான நிதி தொடர்ச்சியாக ஒதுக்கி வரப்பட்டது. இவ்வாறாக, திணைக்களத்தின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில், குறிப்பாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் பெரும் நெருக்கடியைச் சந்தித்த ஆண்டாகக் குறிப்பிட வேண்டும். கொரோனா பேரழிவை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தாலும், அதனால் ஏற்பட்ட பொருளாதார பேரழிவுகளில் இருந்து மீண்டெழுவதற்குப் பல பொருளாதாரங்கள் தவறியுள்ளன.

இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, அரசியல் ஸ்திரமின்மை மற்றும் நாடு வங்குரோத்து நாடாக பிரகடனப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னுரிமை பாரிய சவாலுக்கு உள்ளாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுத் தொகை 50% குறைக்கப்பட்டதோடு இதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மற்றும் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த பல கருத்திட்டங்களுக்கு 2023 ஆம் ஆண்டில் நிதி வழங்க நேரிட்டது.

பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் தொடர்ச்சியான அதிகரிப்பு காரணமாக, நாட்டில் மிகைப் பணவீக்க நிலைமை உருவாகியதோடு, ஒட்டுமொத்த பொருளாதாரமும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியது. குறிப்பாக, கட்டுமானத் துறை பெரும் சரிவைச் சந்தித்தது. இந்த

நிலைமையானது சமூக நீர் திட்டங்களில் மிகவும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, தற்போதுள்ள சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு, திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படும் கடமைப்பொறுப்பை அடைவதற்கு பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செயலாற்றுகையை மேலும் சிறந்த நிலைமைக்கு கொண்டு வருவதற்கு முடியுமாயிருந்ததோடு, ‘‘பிரஜா ஜல அபிமானி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய நீர் கருத்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதன் மூலம் 5836 புதிய நீர் இணைப்புகளும், நெநோ நீர் கருத்திட்டங்களின் மூலம் 4170 புதிய நலன்பெறு குடும்பங்களுக்கும் குடிநீர் பெற்றுக்கொடுக்க இயலுமாயிருந்தது. அதேபோன்று இவ்வாண்டில் காணப்படுகின்ற நீர் கருத்திட்டங்களை திணைக்களத்தில் பதிவு செய்ததன் மூலம் 26498 நலன்பெறு குடும்பங்களை திணைக்களத்துடன் இணைத்துக்கொள்ள இயலுமாயிருந்தது. கடந்த சில ஆண்டுகளினுள் தேசிய நீர் வழங்கல் சபையினால் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக மற்றும் பல்வேறு காரணங்களால் செயலிழந்த நீர் கருத்திட்டங்கள் தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அத்தகைய நீர் இணைப்புகளின் எண்ணிக்கை 163394 என அடையாளம் காணப்பட்டது. இதற்கமைய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சமூக மைய அமைப்புகளின் மூலம் நீர் வழங்கப்படும் நலன்பெறு குடும்பங்களின் எண்ணிக்கை 604981 ஆகுமென்பதோடு இது தேசிய உள்ளடக்கத்தில் 11% ஆகும்.

2024 ஆம் ஆண்டில் பிரஜா ஜல அபிமானி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 47667 பயனாளிகள் குடும்பங்களை இலக்காகக் கொண்டு 179 கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டதோடு, இதில் 22 கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்வதற்கு இயலுமாயிருந்தது. அதேபோன்று காணப்படுகின்ற நீர்க் கருத்திட்டங்களின் 64100 அங்கத்துவக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நீர்க் கருத்திட்டங்களின் புனரமைப்பு மற்றும் தேவையான துணைப்பாகங்களைப் பெற்றுக்கொடுத்தல், சுத்திகரிப்பு செயல்முறைகளை தயாரித்தல், விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தல், மழை நீர் சேகரிப்பு மற்றும் உடல்நலம் பேணல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல், நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல், இனங்காணப்படாத சிறுநீரக நோய் காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு நீர் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

சமூக மைய நீர் திட்டங்களுக்கான நீர் பாதுகாப்புத் திட்டமிடல்களைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் பயனுள்ளதாக ஆக்குகின்ற வகையில் அத்திட்ட அமுலாக்கல்களை கணக்காய்வு செய்தல் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் பயிற்சியளிக்கப்பட்ட நீர் பாதுகாப்புத் திட்ட கணக்காய்வாளர்கள் மீள அழைக்கப்பட்டு அந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மீளாய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டதோடு, அதன்போது பல பிரச்சினைகளை அடையாளம்காண முடியுமாயிருந்தது. அதேபோன்று சமுதாய நீர் வழங்கல் துறைக்கான புதிய பாதைகளை திறந்துவிடும் நோக்கத்துடன் அத்தகைய நீர்க் கருத்திட்டங்களுக்கு சூரிய வலுசக்தியை பெற்றுக் கொடுக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் 3 நில நீர் மீள் செறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் இவ்வாண்டினுள் அமுலாக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

இவ்வாண்டினுள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக மைய அமைப்புகள் ஒழுங்குமுறையாக்கப்பட்டு அவற்றின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ்வாண்டினுள் பல தீர்மானங்களை அமுலாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதோடு, பல்வேறு நிறுவனங்களின் கீழ் செயற்பட்ட சமூக மைய அமைப்புகளை திணைக்களத்திற்கு ஒப்படைத்தல், சமூக மைய அமைப்புகளுக்குச் சொந்தமான சொத்துக்களின் முகாமைத்துவம் ஆகிய பணிகளுக்கான செயல்முறைகள் தயாரிக்கப்பட்டன.

2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரை அமுலாக்கப்படக் கூடியவாறு திணைக்களத்திற்கான மூலோபாய அபிவிருத்தித் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டது. அத்திட்டத்தின் மூலம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினதும் சமுதாய நீர் திட்டங்களை அமுல்படுத்துகின்ற சமூக மைய அமைப்புகளினதும் தற்போதைய நிலைமை அடையாளம் காணப்பட்டதோடு, தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு நிலைபேறான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து அனைத்து சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் மூலமும் பாதுகாப்பான குடிநீரை பெற்றுக் கொடுப்பதற்கும் 2029 ஆம் ஆண்டளவில் நீர் உள்ளடக்கத்தை 14% வரை அதிகரிக்கச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது, இலங்கையில் குழாய் நீர் உள்ளடக்கத்தில் 11% சதவீதமானது சமூக நீர் திட்டங்களால் உள்ளடக்கப்பட்டுள்ளது. 3783 நீர் கருத்திட்டங்களின் மூலம் 5000க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 604981 குடும்பங்கள் தங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து கொள்வதோடு, மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையை பொறுத்தவரை முப்பது இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இதன் மூலம் பயனடைகின்றார்கள்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அதன் அங்கத்துவ நாடுகளால் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைய, குறிப்பாக மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதில் திணைக்களத்தின் அதிகபட்ச அர்ப்பணிப்பு மற்றும் தலையீட்டை 2024 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள விதம் மற்றும் செயலாற்றுகை இந்த அறிக்கையினுள் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

#### தொலைநோக்கு

நிலைபேறான சமுதாய நீர் கருத்திட்டங்களின் ஊடாக பாதுகாப்பான குடிநீர் வழங்கல்.

#### எமது குறிக்கோள்கள்

- சமுதாயத்திற்கு தூய்மையான, பாதுகாப்பான குடிநீரை பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகளை வழங்கல்.
- சமூக மைய அமைப்புகளை வழிநடத்தல் மற்றும் வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்கலுக்கான செலவைக் குறைத்தல்.
- நீர் மூலங்கள் மற்றும் நீரேந்து பிரதேசங்களை அடையாளம்காணல் மற்றும் பாதுகாத்தலும் அதன் பொருட்டு சமூக மைய அமைப்புகளை வழிநடத்தலும்.
- பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையை சாதகமான விதத்திலும் நடைமுறைச்சாத்தியமான விதத்திலும் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமூதாய நீர் திட்டங்களை நிலைபேறான விதத்தில் முகாமைத்துவம் செய்தல்.
- நிலைபேறான சமுதாய நீர்க் கருத்திட்டங்களை வழிப்படுத்தும் பொருட்டு திணைக்களத்தின் இயலளவை அபிவிருத்தி செய்தல்.

### 1.3 பிரதானமான பணிகள்

1. கிராமிய நீர் வழங்கல் மற்றும் உடல்நலம் பேணல் துறைக்கு ஏற்புடையதான தேசிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தலுக்காக உதவுதல்.
2. சமூக மைய அமைப்புக்களுக்கான யாப்புகள் மற்றும் உடன்படிக்கைகளை தயாரித்தல்.
3. சமூக மைய அமைப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்புகள், நீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள், முகாமைத்துவம் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
4. சமூக மைய அமைப்புக்களின் கடமைப் பொறுப்புகளை இலகுபடுத்தும் பொருட்டு பல்வேறு மட்டங்களில் ஏற்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடனான இணைப்பாக்கம்.
5. சமூக மைய அமைப்புக்களின் நீர் கட்டண அறவீட்டு முறைகளை மிகவும் நியாயமானதாகவும் ஒழுங்காகவும் தயாரித்து பேணிவருவதற்கான அளவுகோள்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
6. சமூக மைய அமைப்புக்களின் நிதி முகாமைத்துவத்தை நிதியியல் ஒழுக்கத்துடன் கூடியதாக முறைசார்ந்த விதத்தில் பேணிவருவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல்.
7. சமூக மைய அமைப்புக்களின் நடவடிக்கைகளை பயனுறுதியான விதத்தில் மேற்கொள்வதற்காக பங்கேற்பு பின்ஆய்வு முறையியலொன்றை அமுல்படுத்தல்.
8. சமூக மைய அமைப்புக்கள் மற்றும் அவற்றினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் நீண்டகால இருப்பை உறுதி செய்யும் பொருட்டு மூலோபாய வழிமுறைகளை அடையாளங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு சமூக மைய அமைப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் உதவியளித்தல். இதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புகள் மற்றும் மேம்படுத்தல்களுக்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொடுத்தல்.
9. சமூக மைய அமைப்புக்களால் வழங்கப்படுகின்ற நீரை தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுத்திகரித்து வழங்குவதற்கு சமூக மைய அமைப்புக்களை ஆற்றுப்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

10. சமூக மைய அமைப்புகள், பிரதேச ஒன்றியங்களை தாபித்தல், மாவட்ட ஒன்றியங்களை தாபித்தல் மற்றும் தேசிய ஒன்றியங்களை தாபித்தல்.

11. சமூக மைய அமைப்புக்களுக்கு சொந்தமான நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற நீரின் தரத்தை தொடர்ச்சியாக கண்காணிக்கும் பொருட்டு நடைமுறைச் செயல்முறை ஒன்றை இனங்காணல் மற்றும் அமுல்படுத்தல்.

12. நீர் மூலங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்தல்.

13. சமுதாய நீர் கருத்திட்டங்களின் இருப்பை உறுதி செய்யும் பொருட்டு சமூக மைய அமைப்பின் முகாமைத்துவப் பணிகளை முறைசார்ந்ததாக்குதல் மற்றும் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

14. மழை நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உடல்நலம் பேணல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

15. செயலிழந்துள்ள சமூக மைய அமைப்புகளை இயங்கச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 1.4 நிறுவனம் பற்றிய குறிப்பு

இத்திணைக்களத்தின் கடமைப்பொறுப்பை மக்களுக்கு மத்தியில் கொண்டு செல்வதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தலைமை அலுவலகம் ஒன்றையும் 25 மாவட்ட அலுவலகங்களையும் அதற்குரியதான பணியாட்டொகுதி ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது. திணைக்களத்திற்காக மொத்தம் 503 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, 2024.12.31 ஆம் திகதியளவில் முழு பணியாட்டொகுதியிலும் 437 பேர் சேவையாற்றுகின்றனர் (பதவிநிலை உத்தியோகத்தர்கள் 18 பேர் உள்ளடங்கியதாக). ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவும் உள்ளடங்குகின்றவாறு பட்டதாரி ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார் என்பதோடு வலய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வலய மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதன் நிறுவனக் கட்டமைப்பு பின்வருமாறு.


நிறுவனக் கட்டமைப்பு – தலைமை அலுவலகம்
பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (நிர்வாகம்)
பிரதான கணக்காளர்
பணிப்பாளர் (அபிவிருத்தி, திட்டமிடல்)
பணிப்பாளர் (தொழில்நுட்பம்)
பணிப்பாளர் (பெறுகைகள்)
பணிப்பாளர் (தொழிற்பாடு, மதிப்பீடு)
உதவி பணிப்பாளர் (நிர்வாகம்)
கணக்காளர்
உதவி பணிப்பாளர் (அபிவிருத்தி, திட்டமிடல்)
புவிச் சரிதவியலாளர்
இரசாயன வியலாளர்
சிவில் பொறியியலாள
அபிவிருத்தி உத்தியோகத்தர்
நிர்வாக உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சமூக விஞ்ஞானி
சிவில் பொறியியலாளர்
இயந்திர பொறியியலாளர்
உள்ளக கணக்காய்வாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்/ எழுதுனர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்/ எழுதுனர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்

# மாவட்ட நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்

2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களம் பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் நிர்வகிக் கப்பட்டு வருவதோடு, தற்போது ஒரு தலைமை அலுவலகத்தையும் 25 மாவட்ட அலுவலகங்களையும் உள்ளடக்கியதாயுள்ளது. தலைமை அலுவலகம் பின்வரும் பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்றது.

1. நிர்வாகப் பிரிவு
2. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு
3. கணக்குகள் பிரிவு
4. தொழில்நுட்பப் பிரிவு
5. பெறுகைகள் பிரிவு
6. தொழிற்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
8. மாவட்ட அலுவலகங்கள்

### நிர்வாகப் பிரிவு

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் விளைவுத்தாக்கம்மிக்க சேவையை வழங்கும் பொருட்டு மனித வளங்களை வழிப்படுத்தல் மற்றும் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும். திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கான சேவையில் ஈடுபட்டுள்ளபோது மற்றும் மனித வள அபிவிருத்திக்கு ஏற்புடையதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் நிர்வாகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு இலங்கை நிர்வாகச் சேவை 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர் மற்றும் உத்தியோகத்தர்கள் 17 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி சேவையாற்றுகின்றது.

### அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவானது திணைக்களத்திற்கு ஏற்புடையதான அனைத்து அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பணிகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தித் தேவைப்பாடுகளை இனங்காணல், அதன்படி வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைள அமுலாக்கல், கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் உள்ளிட்ட நேரடியாக அபிவிருத்தியுடன் தொடர்புடைய வேறு பல செயற்பாடுகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை திட்டமிடல் சேவையின் 1 வகுப்பின் பணிப்பாளர் ஒருவர் மற்றும் உத்தியோகத்தர்கள் 7 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி சேவையாற்றுகின்றது.

### கணக்குகள் பிரிவு

இப்பிரிவின் மூலம் திணைக்களத்திற்கு ஏற்புடைய அனைத்துக் கொடுப்பனவுப் பணிகளையும் மேற்கொள்ளல், மாதாந்த, வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திறைசேரிக்குப் பெற்றுக்கொடுத்தல், இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல், முற்பணத் தீர்ப்பனவுப் பணிகள், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விடையளித்தல், கணக்குக் குழு நடவடிக்கைகளின்போது இது தொடர்பிலான

இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல், வருடாந்த கணக்குத் தீர்ப்பனவுப் பணிகள் ஆகியன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முதன்மையான பணிகளாகும். மேற்படி அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை கணக்காளர்கள் சேவையின் 1 ஆம் வகுப்பு பிரதம கணக்காளர் ஒருவர் மற்றும் உத்தியோகத்தர்கள் 12 பேர் சேவையாற்றுகின்றனர்.

### தொழில்நுட்பப் பிரிவு

திணைக்களத்துக்குரிய அனைத்துத் தொழில்நுட்பப் பணிகளும் இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல், இருப்பிலுள்ள கருத்திட்டங்களின் புனரமைப்புப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ஏற்புடையதான அனைத்து மதிப்பீடுகளையும் தயாரித்தல், நிர்மாணிப்புப் பணிகளை பரிசோதித்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல், நிர்மாணிப்புகளின் மேற்பார்வை, கட்டணப் பட்டியல்களைப் பரிசோதித்து அங்கீகாரம் வழங்குதல், தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு தொடர்பாக சமூக மைய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல், வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உதவியளித்தல் ஆகியன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதானமான பணிகளாகும். மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் தலைமை அலுவலகத்தின் இலங்கை பொறியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பு பணிப்பமாளர் ஒருவர், பொறியியலாளர் ஒருவர் மற்றும் பணியாட்டொகுதியின் 09 பேர் மூலமும், வலய மட்டத்தில் 09 பொறியியலாளர்கள், 27 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலமும் 19 நிறைவற்ற்டுகின்றன.

### பெறுகைகள் பிரிவு

திணைக்களத்தின் பணிகளைப் பேணிவருவதற்குத் தேவையான கொள்வனவுப் பணிகள் அதேபோன்று சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டப் பணிகளை பேணிவருவதற்குத் தேவையான அனைத்துக் கொள்வனவுப் பணிககளை பெறுகைகள் வழிகாட்டி மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப மேற்கொள்ளல் இப்பிரிவின் கடமைப் பொறுப்பாகும். மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை பொறியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர், மற்றும் பணியாட்டொகுதியில் 06 பேர் சேவையாற்றுகின்றனர். எவ்வறாயினும் தற்போது பணிப்பாளர் (பெறுகைகள்) பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

### தொழிற்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு

திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அதேபோன்று தற்போது நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து சமூக மைய அமைப்புகளையும் உரியவாறு கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்கின்ற கடமைப்பொறுப்பு இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. திட்டமிடப்படும் கருத்திட்டங்களை வினைத்திறனுடனும் பயனுறுதியான விதத்திலும் நிறைவு செய்து மக்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இப்பிரிவு தீவிர தலையீட்டுடன் செயற்படுகின்றது. குறிப்பாக உலக வங்கி உதவியின் கீழ் இது தொடர்பில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதனூடாக கிராமிய நீர் வழங்கல் துறையில் முறைசார்ந்த அபிவிருத்தி மற்றும் திட்டமிடலுடன் தொடர்புடைய மிகவும் துல்லியமானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தரவுகள் மற்றும் தகவல்களை இப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமாயுள்ளமை விசேட வெற்றியாகும். அனைத்து சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் உள்ளடங்கிய கனணிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்கான இணையத் தளமொன்றைத் தயாரித்தல், மக்களுக்கு உடனடித் தொலைபேசி அழைப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகளை (1914) ஏற்பாடு செய்வதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதை துரிதப்படுத்தல், சமூக மைய அமைப்புகளின் பணிகளை நெருங்கியிருந்து மேற்பார்வை செய்வதற்கான முறைமையொன்றைத் தயாரிப்பதன் ஊடாக மக்களுக்கு மிகத் துரிதமானதும் வினைத்திறன்மிக்கதுமானதொரு சேவையை

வழங்குதலும் அதேபோன்று அபிவிருத்திக் கருத்திட்டங்களை மிகப் பயனுறுதியானதாகவும் வினைத்திறனுடனும் நெறிப்படுத்தலும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை திட்டமிடலாளர் சேவையின் 11 ஆம் வகுப்பு பிரதிப் பணிப்பாளர் ஒருவர், உள்ளிட்ட பணியாட்டொகுதியில் 7 பேர் சேவையாற்றுகின்றனர்.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

இப்பிரிவு தனியானதொரு பிரிவாக 2020 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை மிகவும் சரியான விதத்தில் மேற்கொள்ளலும், உள்ளக நிர்வாக செயற்பாட்டை பகிரங்கத்தன்மையுடன் சரியான முறையியலொன்றின்படி மேற்கொள்வதற்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக நிகழ்கின்ற தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் குறைத்தலும் இப்பிரிவு தாபிக்கப்பட்டதன் முதன்மையான குறிக்கோளாகும். அதேபோன்று சமுதாய நீர் கருத்திட்டங்களில் நடைபெறுகின்ற தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் குறைத்து சரியானதொரு செயற்பாட்டினுள் நிறுவனத்தை இட்டுச்செல்லலும், ஊழல் மோசடிகள் நடைபெறுவதற்குள்ள வாய்ப்புகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்ற மேலுமொரு குறிக்கோளாகும். மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை கணக்காளர் சேவையின் 11 ஆம் வகுப்பு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டு அதற்கேற்ப இப்பிரிவு தாபிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் இக்கணக்காய்வுப் பிரிவு முறைசார்ந்த விதத்தில் தாபிக்கப்பட்ட போதிலும் வெற்றிடமாகிய 11 ஆம் வகுப்பு கணக்காளர் ஒருவரை நியமிப்பதிலுள்ள சிரமத்தின் காரணமாக இதன் நடவடிக்கைகள் செயலிழந்துள்ளன. அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, மிதத் துரிதமாக இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**மாவட்ட அலுவலகங்கள்**

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் கடமைகளை மக்களுக்கு மிகவும் அண்மித்ததாக ஆக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு 25 மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் காணப்படுகின்ற சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களை அடையாளங்காணல், முன்னுரிமைப்படுத்தல், சமூக மைய அமைப்புகளைக் கட்டியெழுப்பல், தற்போதுள்ள சமூக மைய அமைப்புகளை பலப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், அடையாளம்காணப்பட்ட நீர் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு கருத்திட்டங்களைத் திட்டமிடல் அறிக்கை தயாரித்து ஏற்புடைய தரப்பினர்களுக்கு ஆற்றுப்படுத்தி தேவையான நிதியங்களைப் பெறுதல், சமூக மைய அமைப்புகளின் பிரச்சினைகளை இனங்காணல், தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் திறன்வளர்ச்சி, தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நீரின் தரத்தைப் பேணிவரும் பொருட்டு மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்து அமுலாக்கும் பொருட்டு சமூக மைய அமைப்புகளை ஆற்றுப்படுத்தல், நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கு மக்களை ஊக்குவித்தல் மற்றும் தகவல் திரட்டல், இற்றைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல் ஆகியன மாவட்ட அலுவலகங்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பிரதானமான பணிகளாகும்.

மேற்படி கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் முழு மாவட்டத்தையும் உள்ளடக்கக்கூடிய வகையில் மாவட்டதின் பரப்பளவு, சமூக மைய அமைப்புகளின் எண்ணிக்கை, இருப்பிலுள்ள குழாய் நீர் உள்ளடக்கம் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதி ஒன்று இணைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றது.

இதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாகாண மட்டத்தில் மாவட்டப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் தற்போதுள்ள மாவட்ட அமைப்பு முறையை ஆராய்ந்ததன் பின்னர் தற்போத முகம்கொடுக்கின்ற சவால்களுக்கு வெற்றிகரமாகத் திர்வுகளைப் பெற்றுக்கொடுக்க இயலுமான வகையில் மாவட்ட மட்ட முகாமைத்துவ்ததை மேலும் பலப்படுத்துவதற்கு புதியதொரு நிறுவனக் கட்டமைப்பொன்றும் பணியாட்டொகுதியொன்றும் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

### 1.6 அமைச்சு/ திணைக்களம்/ மாகாணசபையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்/ நிதியங்கள்

திணைக்களத்தின் அனைத்து நிர்வாக மற்றும் நிதி அலுவல்கள் மத்தியமயப்படுத்தப்பட்டதாக மேற்கொள்ளப்படுவதோடு, சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் பணிகள் மாவட்ட அலுவலகங்களின் ஊடாக நடைபெறுகின்றன. திணைக்களத்தின் கடமைகளை மக்களுக்கு மேலும் அண்மித்ததாக ஆக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

### 1.7 வெளிநாட்டு உதவிகளைப் பெறுகின்ற கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

திணைக்களத்தின் கீழ் நேரடியாக அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்கள் இல்லை என்பதோடு, நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற WASSIP கருத்திட்டம், CRIWMP மற்றும் UNICEF கருத்திட்டங்களின் தரப்பினர் ஒருவராக திணைக்களம் செயலாற்றுகின்றது. அதேபோன்று சீன இலங்கை ஒத்துழைப்பு ஆராய்ச்சி மற்றும் முன்னுதாரண நிலையம் (JRDC) மற்றும் சீனாவின் RECAS நிறுவனத்துடனும் திணைக்களம் ஒத்துழைப்புடன் செயலாற்றுகின்றது.

# 02வது அத்தியாயம்

## முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

## விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2.1 2024 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு 2024 வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகை ரூபா 1734.22 மில்லியனாகும் என்பதோடு, மாகாண சபை மற்றும் பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிகமாக ரூபா 43.26 மில்லியன் நிதி ஏற்பாட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள இயலுமாயிருந்தது. தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டின் மூலம் 435 கருத்திட்டங்களையும், நீர் வழங்கல் திணைக்கள நிதி ஏற்பாட்டின் மூலம் 13 கருத்திட்டங்களையும் அமுலாக்க இயலுமாயிருந்ததோடு, யுனிசெப் நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்ட மேலதிக நிதி எற்பாட்டின் மூலம் 2 கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 169 இன் வேலைகளை நிறைவு செய்ய இயலுமாயிருந்ததோடு, இந்தக் கருத்திட்டங்களின் மூலம் 35,000 குடுப்பங்களுக்கு நலன்களை பெற்றுக்கொடுக்க இயலுமாயிருந்தது.

#### 2.1.1 முழுமொத்த செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம்

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 475 |
| நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 169 |
| தற்போது அமுலிலுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 306 |
| கிடைத்த மொத்த நிதி ஏற்பாடு ரூபா மில்லியன் | 1878.252 |
| மொத்த செலவு ரூபா மில்லியன் | 985.75 |
| கைவசமுள்ள கட்டணப் பட்டியல்கள் ரூபா மில்லியன் | 0 |

### 2.1.2 திணைக்கள நிதி ஏற்பாட்டின் கீழ் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

<table>
<tr><th rowspan="2"></th><th rowspan="2">நிகழ்ச்சித்திட்டம்</th><th rowspan="2">அமுலிலுள்ள கருத்திட்டம்</th><th rowspan="2">கிடைத்த மொத்த நிதி ஏற்பாடு (ரூ.மி.)</th><th rowspan="2">அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட எண்ணிக்கை</th><th colspan="2">நிதியியல் முன்னேற்றம்</th><th colspan="2">பௌதீக முன்னேற்றம்</th></tr>
<tr><th>செலவு (ரூ.மி.)</th><th>கைவசமுள்ள கட்டணப் பட்டியல் (ரூ.மி.)</th><th>அமுலிலுள்ள கருத்திட்டம்</th><th>நிறைவு பெற்ற கருத்திட்டம்</th></tr>
<tr><td>1</td><td>பிரஜா ஜல அபிமானி நிகழ்ச்சித்திட்டம்</td><td>25மாவட்டங்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட புதிய 179 கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்தல்</td><td>1231.23</td><td>179</td><td>663.44</td><td>0</td><td>157</td><td>22</td></tr>
<tr><td rowspan="9">2</td><td rowspan="9">சமுதாய நீர் கருத்திட்டங்களை மேம்படுத்தல்</td><td>தற்போதுள்ள கருத்திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தொடர்ந்துவரும் 74 கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்தல்</td><td>213.293</td><td>74</td><td rowspan="9">255.34</td><td rowspan="9">0</td><td rowspan="9">122</td><td rowspan="9">131</td></tr>
<tr><td>உடல்நலம் பேணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர்ந்துவரும் 294 கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்தல்</td><td>4.5</td><td>8</td></tr>
<tr><td>பொது உடல்நலம் பேணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடந்து வருகின்ற 8 கருத்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்படல்</td><td>7</td><td>8</td></tr>
<tr><td>30 சமுதாய நீர் கருத்திட்டங்களுக்கான நெனோ சுத்திகரிப்பு முறைமைகளை தாபித்தல்</td><td>35.35</td><td>30</td></tr>
<tr><td>68 சமுதாய நீர் கருத்திட்டங்களின் புனரமைப்பு வேலைகளை நிறைவு செய்தல்</td><td>218.49</td><td>68</td></tr>
<tr><td>அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகளை நடத்துதல்</td><td>1</td><td>5</td></tr>
<tr><td>21 மாவட்டங்களில் சமூக மைய அமைப்புகளின் அங்கத்தவர்களுக்கு 50 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்</td><td>5</td><td>50</td></tr>
<tr><td>அனர்த்த சந்தர்ப்பங்களில் சமூக மைய நீர் கருத்திட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்</td><td>15.36</td><td>10</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | நீர் பாதுகாப்புத் திட்டம் | சமுதாய நீர் கருத்திட்டங்களுக்கான நீர் பாதுகாப்பு திட்டம் மற்றும் நிலநீர் மீள் செறிவூட்டலுக்கான கருத்திட்டங்களை அமுல்படுத்தல் | 3 | 3 | 3 | 0 | 0 | 3 |
| | | **மொத்தம்** | **1737.223** | **435** | **921.78** | **0** | **279** | **156** |

**2.2 விசேட சாதனைகள்**

2022 ஆம் ஆண்டில் முழு நாடும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியதன் பேரில் அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்ததோடு, அதன் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த பல கருத்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ள நேரிட்டது. ஆயினும், 2023 ஆம் ஆண்டில் இப்பிரச்சினையை ஓரளவு தீர்த்துக்கொள்ள இயலுமாயிருந்ததோடு, 2024 அம் ஆண்டில் சில வெற்றிகளை அடைவதற்கு இயலுமாயிருந்தது.

1. ஆயிரம் கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் குறிக்கோளுடன் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டமாக புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ‘‘பிரஜா ஜல அபிமானி’’ நிகழச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல்.

2. உள்நாட்டு நிதியங்களைப் பெறுவதிலுள்ள நெருக்கடிக்குத் தீர்வாக உலக வங்கி, யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் - UNDP (CRIWMP) நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பல பாரிய கருத்திட்டங்களுக்குத் தேவையான நிதியத்தைப் பெற்றுக்கொள்ளல்.

3. உலக வங்கி, யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் - UNDP (CRIWMP) நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மைய அமைப்புகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தல்.

   - WASSIP கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் தொடர்பாக பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல்.

   - UNDP நிதி ஏற்பாட்டின் கீழ் தொழில்நுட்ப ஆற்றல் அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட திட்டமிடல் தொடர்பில் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் சமூக மைய அமைப்புகளுக்கு மத்தியில் அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் இணைப்பாக்கம் தொடர்பில் அறிவூட்டல்களை மேற்கொள்ளல்.

4. கடுமையான சிறுநீரக நோய்க்குத் தீர்வாக வட மாகாணத்தில் 3 மாவட்டங்களில் மீள் குடியமர்ப்பட்ட மக்களுக்கு 50 நெனோ சுத்திகரிப்பு இயந்திரங்களை தாபித்தலை நிறைவு செய்தல் மற்றும் அந்தக் கருத்திட்டங்களை மக்களுக்கு ஒப்படைத்தல்.

5. உலக வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நீர் வழங்கல் மற்றும் உடல்நலம் பேணல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தை மேம்படுத்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.

6. திணைக்களத்தின் பொருட்டு 2025 – 2029 5லோபாய அபிவிரத்தித் திட்டத்தை தயாரித்தல்.

7. போதியளவு தொழில்நுட்ப மற்றும் ஏனைய பணியாட்டொகுதியினர் இல்லாத போதிலும் முன்னைய ஆண்டிற்க ஒப்பீட்டளவில் உயர் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள இயலுமாகியுள்ளமை.

8. காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் கணக்காய்வின் 5லம் சட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு காணப்படுகின்ற வழிகாட்டல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தலை 2025 இன் முதற் பகுதியில் ஆரம்பித்தல்.

**2.3 எதிர்கால இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு அதன் அங்கத்துவ நாடு என்ற வகையில் இலங்கையும் கடப்பாடுடையதாக இருப்பதால் எதிர்வரும் காலம் திணைக்களத்திற்கு மிகவும் சவால்மிக்கதொரு காலமாக காணப்படுகின்றதெனக் குறிப்பிடலாம். தற்போதுள்ள நெருக்கடிக் காலத்தினுள் இருப்பிலுள்ள வளங்களை முகாமைத்துவம் செய்து கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு திணைக்களத்தின் எதிர்கால இலக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களையும் அரசாங்கத்திற்கு சுமையாகாதவாறு பேணிவரத்தக்க வகையில் அந்த அமைப்புகளை வலுவூட்டல்.
- கடந்த நான்கு தசாப்த காலத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள சமுதாய நீர் கருத்திட்டங்களின் ஊடாக வழங்கப்படுகின்ற நீரின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நீர் சுத்திகரிப்பு முறைகளை தாபித்தல்.
- தேசிய நீர் வழங்கல் சபையினால் நீர் வழங்க முடியாதுள்ள கஷ்டப் பரதேசமான ஆயிரம் கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் குறிக்கோளுடன் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட “பிரஜா ஜல அபிமானி” நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்தல்.
- ஒவ்வொரு சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கும் நீர் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தயரித்து அமுல்படுத்தல்.
- அனைத்து சமுதாய நீர் கருத்திட்டங்களுக்கும் உரித்தான நீரேந்து பிரதேசங்களை பாதுகாத்தல்.
- கிராமிய நீர் வழங்கல் துறைக்காக தாபிக்கப்பட்ட தேசிய தரவுத் தளத்தை இற்றைப்படுத்தி பேணிவருதல்.
- கிராமிய மற்றும் பெருந்தோட்ட சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு உடல்நலம் பேணும் மலசல கூட வசதிகளில் 100% இலக்கை அடையப்பெறுதல்.
- சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படுகின்ற பிரதேசங்களின் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு சுத்திகரிப்பு முறைமைகளைத் தாபித்தல். ( RO Plant/Nano Plant/EDR Plant)
- மிகவும் கஷ்டமான மற்றும் குடிநீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மழை நீர் சேகரிப்பு முறைமைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தனியார் மற்றும் அரசாங்க ஒத்துழைப்புடன் (PPP) கூடியதாக நீர் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

**2.4 சவால்கள்**

1. சமூக மைய அமைப்புகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்ட வரைச்சட்டகம் அங்கீகரிக்கப்படுவதில் உள்ள கால தாமதம்.

2. பொருளாதார நெருக்கடிக்கடியின் முன்னே சமுதாய நீர் கருத்திட்ட எண்ணக்கருவினுள் கருத்திட்டங்களின் தொடர்ச்சியான இருப்புக்கு அத்தியாவசியமானதொரு காரணியாக உள்ள சமுதாய பங்களிப்பைப் பெறுகின்றபோது பிரச்சினைகள் தோன்றுதல்.

3. இருப்பிலுள்ள நீர் மூலங்கள் அசுத்தமாக்கப்படல் காரணமாக உருவாகியுள்ள நெருக்கடி.

   - காலநிலை மாற்றங்கள், மனிதனின் பல்வேறான செயற்பாடுகள், நகரமயமாக்கல் மற்றும் நாட்டினுள் நடைபெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக நீர் மூலங்கள் அசுத்தமாக்கப்படலும் மாசடைதலும் நடைபெற்றுள்ளது.

4. காலநிலை மாற்றங்கள் காரணமாக நீர் ஊற்றுக்கள் வற்றிவிடுதல், அதேபோன்று திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் இலக்கிடப்பட்ட குழுக்கள் திட்டத்தை விஞ்சிச் சென்று நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு செயற்படுவதன் ஊடாக நீர் ஊற்றுக்கள் போதியதாக இல்லாமையும் காரணமாக சமூக மைய நீர் கருத்திட்டங்கள் செயலிழக்கின்ற ஆபத்து நிலை.

5. தற்போது அமுலிலுள்ள கருத்திட்டங்களின் மூலம் சுத்திகரிக்கப்படாது விநியோகிக்கப்படுகின்ற நீரை சுத்திகரிக்க வேண்டியுள்ள பிரச்சினை.

   நான்கு தசாப்தத்திற்கு அதிக காலத்தினுள் பெரும்பாலான கருத்திட்டங்களில் சுத்திகரிக்கப்படாது நீர் வழங்கப்படுவதோடு கருத்திட்ட திட்டமிடலினுள் சுத்திகரிப்பு முறைமையொன்று உள்ளடங்காதுள்ளதன் காரணமாக மீண்டும் புதிதாக சுத்திகரிப்பு முறைமையொன்றை திட்டமிடுகின்றபோது மேலதிக செலவினத்தை ஏற்க நேரிடுதல்.

6. சமூக மைய நீர் கருத்திட்டங்களின் நீரின் தரத்தை உரியவாறு பரிசோதிப்பதற்கு போதியளவு வசதிகள் இல்லாமை, அதற்கான செலவுகள் அதிகரித்துள்ளமை மற்றும் இரசாயனப் பொருட்களின் பற்றாக்குறை.

7. மின்சக்திக்கான அறவீடுகள் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற சமூக மைய நீர் கருத்திட்டங்களின் செலவு தாங்கிக்கொள்ள முடியாத அளவு அதிகரித்துள்ளமையின் காரணமாக சமூக மைய நீர் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மை சவாலுக்கு உள்ளாகின்ற ஆபத்தான நிலை.

8. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் நீருக்கான அறவீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையை தொடர்ந்து அச்சபையிலிருந்து மொத்தமாக நீர் வழங்கலைப் பெறுகின்ற சமூக மைய நீர் கருத்திட்டங்களின் செலவு தாங்கிக்கொள்ள முடியாத அளவு அதிகரித்துள்ளமையின் காரணமாக சமூக மைய நீர் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மை சவாலுக்கு உள்ளாகின்ற ஆபத்தான நிலை.

9. திணைக்களத்தில் காணப்படுகின்ற ஆளணியினர் பற்றாக்குறை.

10. பல்வேறு நிறுவனங்களால் சமதாயத்திற்கு இலவசமாக நீர் வழங்கப்படுவதன் (குறிப்பாக நெநோ மற்றும் ஆர்ஓ நீர் சுத்திகரிப்பு முறைமைகள்) காரணமாக அப் பிரதேசங்களில் நீர் வழங்கப்படுகின்றபோது சமுதாயம் திணைக்கள செயன்முறைக்கு இணங்கியொழுக விரும்பாததன் காரணமாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் பயனளிக்காமை.

.................................

கணக்கீட்டு உத்தியோகத்தர்

M.M. Ananda Wijitha Kumara Mapa
Director General
Department of National Community Water Supply
No. 1114, Pannipitiya Road,
Thalawathugoda.

.................................

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்

ඉංජි. එල්. බී. කුමුදු ලාල්
ලේකම්
නිවාස, ඉදිකිරීම් සහ ජල සම්පාදන අමාත්‍යාංශය
12 වන මහල, "සෙත්සිරිපාය" අදියර - II
බත්තරමුල්ල

# 03 வது அத்தியாயம்

## 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமொத்த நிதியியல் செயலாற்றுகை

**3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

**ஏசீஏ-எப்**

**2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான**

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2024 ரூபா | | குறிப்பு | உண்மையான | | |
|---|---|---|---|---|---|
| | | | 2024 ரூபா | 2023 ரூபா | |
| - | **வருமானக் கிடைப்பனவு** | | - | - | |
| - | வருமான வரி | **1** | - | - | ஏசீஏ - 1 |
| - | உள்நாட்டு பண்டங்கள், சேவைகள் மீதான வரி | **2** | - | - | |
| - | பன்னாட்டு வியாபாரம் மீதான வரி | **3** | - | - | |
| - | வரியல்லாத வருமானம் மற்றும் ஏனையவை | **4** | - | - | |
| - | **மொத்த வருமானக் கிடைப்பனவு(அ)** | | - | - | |
| - | **வருமானம் அல்லாத கிடைப்பனவு** | | **-** | - | |
| 2,150,953,950 | திறைசேரி முற்பணம் | | 1,523,447.017 | 1,000,913,619 | **ஏசீஏ-3** |
| 100,000,000 | வைப்புகள் | | 133.043,184 | 134,171,377 | **ஏசீஏ-4** |
| 20,000,000 | முற்பணக் கணக்கு | | 15,850.464 | 10,015,711 | **ஏசீஏ-5** |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்குக் கிடைப்பனவுகள் | | | | |
| 2,270,953,950 | **மொத்த வருமானம் அல்லாத கிடைப்பனவு (ஆ)** | | **1,726.800,257** | **1,169,607,116** | |
| 2,270,953,950 | **மொத்த வருமானக் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு இ=(அ)+(ஆ)** | | **1,726,800,257** | **1,169,607,116** | |
| 26,020,457 | **திறைசேரிக்கான அனுப்பல்கள் (ஈ)** | | **26,020,457** | **-** | |
